வா
மீதமுலை
எறி

நெல்லை கண்ணன்

வா
மீது முலை
எறி

— நெல்லை கண்ணன் —

வேலுக்கண்ணன் பதிப்பகம்

ப.எண். 69, பு.எண். 171, அம்மன் சந்நதித் தெரு,

திருநெல்வேலி நகரம் - 627 006.

94431 36450

முதற் பதிப்பு	:	2004
இரண்டாம் பதிப்பு	:	2012
மூன்றாம் பதிப்பு	:	2021
பதிப்பாளர்	:	வேலுக்கண்ணன் பதிப்பகம் ப.எண். 69, பு.எண். 171 அம்மன் சந்நதித் தெரு திருநெல்வேலி நகரம் - 627 006
உரிமை	:	ஆசிரியருக்கே
உள் அட்டை ஓவியம்	:	பொன்.வள்ளிநாயகம்
நூல் விபரம்	:	N.S. மேப்லித்தோ அளவு : பக்கம் 200 ஆர்ட் போர்டு
அச்சிட்டோர்	:	எழுத்துக் கலையகம் திருநெல்வேலி
விலை	:	250.00

அணிந்துரை

தா. பாண்டியன்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சென்னை.

இலக்கிய ஆர்வமும், அரசியல் உணர்வும் உள்ள தமிழர்கள் அனைவரும் திரு. நெல்லை கண்ணனை நன்கு அறிந்திருக்கிறார்கள். இவரது சொற்பொழிவுளை விரும்பிக் கேட்கிறார்கள். எழுத்தை ஆர்வத்துடன் படிக்கிறார்கள். சிலர் கடிந்தும் விமர்சிக்கிறார்கள்.

இவர் பேசுவதை நான் பல்லாண்டுகளாகக் கேட்டு மகிழ்ந்தவன். பழைய செய்திகளையும், வார ஏட்டு நகைச்சுவைத் துணுக்குகளையும் நிறைத்து, பொழுதை ஓட்டி விடும் சிலரைக் கண்டு நொந்துள்ளேன். முற்றிலும் மாறுபட்ட ஒரு இளைஞரின் குரலை இருபதாண்டுகட்கு முன்னர் கேட்டேன். இலக்கிய நயம், நகைச்சுவை, கண்டிப்பான விமர்சனம், உச்சரிக்கும் அழகு, அடுக்கடுக்காய்த் தொடரும் வாதங்கள், ஆதாரங்கள், அரசியல் பேச்சாக இருந்தால் புள்ளி விபரங்கள், வரலாற்றுக் குறிப்புகள் என நீளும் இவரது பேச்சில் புதுமை இருப்பதை உணர்ந்தேன்.

போலி ஆன்மீகவாதிகளையும், பிழைக்கும் அரசியல்வாதிகளையும் பற்றிப் பேசுகிற போது, சொற்சரம் சூடேறுவதைக் கேட்டுள்ளேன். இவரது விமர்சனத்திற்கு ராமன் முதல் காஞ்சி வரை தப்பவில்லை. கட்சித் தலைவர்களையும் பெயர் குறிப்பிடாமல் நாகரிகமாகக் குட்டுகிற பாங்கு ரசிக்கத் தக்கது.

ஒரு முதிய நண்பர் “நெல்லை கண்ணனுக்கு செந்தமிழ் நாக்கு இருக்கிறது. அற்புதமான நினைவாற்றல் இருக்கிறது. ஆனால், பல சமயங்களில் நாக்கு கொடுக்காக மாறி கொட்டி விடுகிறது. அதுதான் குறை” என்றார். “யாரையும் விடுவது இல்லை. சகலரையும் குத்துகிறாரே” என்றும் குறைபட்டுக் கொண்டார்.

நானும் ஒரு முறை அல்ல பல முறை கேட்டிருக்கிறேன். அதில் நான் குறை காண முடியவில்லை. வரும் விளைவு பற்றிக் கவலைப்படாத ஞானச் செறுக்கும், “மிகுதிக்கண் மேற் சென்று இடித்தற் பொருட்டு” என்ற வள்ளுவன் வழியிலும், பாதகம் செய்பவரைக் கண்டால், பயங்கொள்ளல் ஆகாது பாப்பா. மோதி மிதித்த விடு பாப்பா. முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா என்று பாடிய பாரதியினுடைய பேரனின் சீற்றத்தைத் தான் நான் கேட்டேன்.

அது வலிந்து, பொறாமையால் புகைந்து கிளம்பும் அம்புகளாய் எனக்குத் தோன்றவில்லை. இருப்பினும் “கனிருப்பக் காய் கவர்ந்தற்று” என்பதையும் கருத்தில் கொள்வது நல்லதே...

நாள்தோறும் சிந்தனையில் வளர்ந்து வரும் கண்ணனை கண்டு மகிழ்ந்து வருகிறேன். சொற்பொழிவாளர்கள் பேசிப் பேசியே பொழுதைக் கழித்து மறைத்து விடுகிறார்கள். அவர்கள் பேசியதும் காற்றோடு போய் விடுகிறது. மக்களிடம் பேசுகிறவன், மக்களுக்குத் தெரியாத விபரங்களைக் கூற வேண்டும். தெளிவும்

விளக்கமும் தர வேண்டும். அறிவை வளர்ப்பதாக, அறிவை வளர்ப்பதாக, நம்பிக்கையூட்டுவதாக இருத்தல் அவசியம்... இது தேவை என்றால், இடைவிடாது அறிவைத் தேட வேண்டும். மூளையில் செல்வச் சேமிப்பு இல்லாமல், நாக்கை மட்டும் தீட்டி, காற்றை ஊதக் கூடாது. அது தானும் கெட்டு, மக்களையும் கெடுக்கும் வழியாகும்.

பலர் பேசுவதோடு கடமை முடிந்ததாகக் கருதி, எழுதுகோலை எடுப்பதே இல்லை. தம்பி கண்ணன் உரைநடையிலும் எழுதுகிறார். நெல்லைத் தமிழில் கதையும் படைக்கிறார். இப்போது புதுக்கவிதைச் சாட்டையையும் எடுத்துக் கையாண்டு வருகிறார். மூன்று துறைகளிலும் வெற்றிப் படிகளில் ஏறியே வருகிறார்.

இவரது குறுக்குத்துறை ரகசியங்களைப் படித்து சிரித்த நேரம் அதிகம். நெல்லையைப் பற்றிய படப்பிடிப்பு, குத்தல் பேச்சு நடை, நாகரீகமாக நடந்த காரியத்தை வருணிக்கும் அழகு என்னைக் கவர்ந்தது.

இவற்றின் மையக்கருவாக மூடப் பழக்க வழக்கங்களைச் சாடுவதும், முன்னோக்கிப் பார் என எழுப்பும் கருத்தும் அவரது கதைக்கு வலுவூட்டுகின்றன.

" வா - மீதமுலை - எறி" என்ற தலைப்பிட்டு வரும் கவிதைத் தொகுதி பல பொருட்களைத் தொடுகிறது. சில இடங்களில் சுடுகிறது. சுட வேண்டியதைத் தான்...

"கொள்கைகள் இறந்ததை அறியா கொடிகள்,
தலைவர்கள் இறந்ததும் தாழப்பறந்தன"

என்ற வரிகள் புற்றீசல் போல் பிறந்து மறையும் பல அரசியல் கட்சிகளின் வரலாற்றை எவ்வளவு தெளிவாக, ஆனால் தாங்காத துயரத்துடன் கூறுகிறது. இதற்கடுத்த வரியில்

"தோண்டிய குழியில்,
கொள்கைகள் புதைத்தால்,
காவலாய் தலைவரே... சிலையாய் நிற்பார்.

இந்த வரிகள் நாட்டின் அவலத்தை அப்படியே படம் பிடிக்கின்றன. அதில் நேர்மை வழி நிற்கும் குடிமகன் ஒருவனின் கொதிப்புத் தெரிகிறது. பொதுவாகக் கூறியிருக்கிறார். இது யார், யார் தலைக்குப் பொருந்தும் என்பதை மாட்டிப் பார்த்துக் கொள்ளவிட்டிருக்கிறார். ஏனெனில் அது ஒன்றா, இரண்டா? இவர் பாகுபாடின்றி, பாரபட்சம் பாராது, தீய போக்குகளை எங்கு கண்டாலும், சாடிடத் தவறுவது இல்லை.

இயேசுநாதர் மீண்டும் வருவார் விரைவில் வருவார் எல்லோரையும் எழுப்புவார். பாவிகளை மன்னிப்பார். நம் பாவத்தை கழுவத்தான் அவர் சிறையில் அறையப்பட்டார்.... இந்தப் பாணியில் பாதிரியார்கள் நாடு முழுமையிலும் பேசி வருவதைக் கேட்கிறோம். கண்ணனும் கேட்டிருக்கிறார்.

இன்று நம்மோடு வாழும் பல மதப் பிரச்சாரர்களின் "வாழ்முறையைக்" கண்டிருப்பதால், அந்தப் பேச்சிற்குப் பின்னால், கண்ணனின் காதில் இன்னொரு குரல் ஒலிக்கிறது.

"இயேசு வருகின்றார். ஆயத்தப்படு.
சிலுவையைக் கழுவு. ஆணிகள் தயார் செய்.
முள்ளில் கிரீடம் முக்கியம்" என முடிக்கிறார்.

இந்தப் பாவங்களுக்காகவும் இயேசுநாதர் மீண்டும் சிலுவையில் தான் அறையப்பட வேண்டுமா? தெரியாது செய்கின்ற பாவத்தைவிட தெரிந்தே ஆண்டவன் பெயரால் செய்வது... கண்ணனுக்குப் பிறந்த சீற்றம், இயேசுநாதர் எருசலேம் கோயிலுக்குள் நுழைந்து வணிகர்களைக் கயிற்றால் "அடித்து" விரட்டியது நினைவுக்கு வருகிறது.

"ஓடிப்போன சாமியக் காட்டிலும்
உள்ளூர் சாமி ஒசத்திதான்வே"...

இந்த வரிகள் பழுக்கக் காய்ச்சிய கம்பியால் ஒருவர் முதுகில் கோடு வரைவதைக் காட்டுகிறது. "உள்ளூர் சாமி ஒசத்திதான்வே" என்பதில் இந்திய சமுதாய மோதலின் சரித்திர உள்ளடக்கம் இருக்கிறது.

"கருப்பர்கள் குவிக்கும் தங்கப்பதக்கம்
மார்ட்டின் லூதருக்கா? அமெரிக்காவுக்கா?

என்ற கேள்வி நிறவெறிப் போராட்டத்தின் துயரக் கதையை நினைவூட்டுகிறது.

"காட்டு மரங்களை நாங்கள் வெட்டுவது,
வீட்டுக்கொரு மரம் நீங்கள் வளர்க்கவே"

நம் நாடு பொட்டலாவதற்கான காரணத்தை விளக்குகிறது.

இவர் பல பொருட்களைத் தொட்டுள்ளார். ஒவ்வொன்றிலும் காணும் குறைகளைச் சாடி, நல்லன நாடி இருப்பது தெரிகிறது. எல்லா வரிகளையுமே மேற்கோளாகக் காட்ட வேண்டி இருக்கிறது. எனவே, நீங்களே படியுங்கள்.

"பெரிய மகன் அமெரிக்காவில்...
சின்ன மகன் லண்டன் மாநகரில்...
கடைசி மகளோ ஆஸ்திரேலியாவில்...
அந்நியர் இந்தியாவை ஆள அனுமதியோம்.
இந்திய நாடு, எங்களின் நாடு... ஜெய் ஹிந்த்"

என்ற வரிகள் இன்றைய மக்களின் மனப்போக்கினைச் சுட்டிக் காட்டுவதோடு, சுதந்திர நாட்டில் பிறந்துள்ள அடிமைகளையும் அடையாளம் காட்டுகிறது.

முருகன் மொட்டை அடித்து இருப்பதும், கோவணத்துடன் நிற்பதும், அவன் முதல் உழைப்பாளி என்பதைக் காட்டுகிறது என்பதில் சகலமும் அடங்கியிருக்கிறது.

திங்கப் பொறந்தவன்

திருநெல்வேலிக்காரன்

எழுத்து கவிதை

எல்லாத்தையுந்தான்... என்பது இவருக்குப் பொருந்தும். அதனால்தான், பிரம்மா, சிவன், சினிமா, விளையாட்டு, குடும்பக்கட்டுப்பாடு, எய்ட்ஸ் ஆகிய எதுவும் இவர் பார்வைக்குத் தப்பவில்லை.

பாட்டிலே அறங்காட்ட முனைந்துள்ள திரு. நெல்லைக் கண்ணன் தொடர்ந்து எழுத வேண்டும். பாட்டிலே அறம் காட்ட வேண்டும். கூட்டிமானுடச் சாதியை ஒன்றெனக் கொண்டு, வையம் முழுதும் பயனுற எழுதிட வேண்டும்.

சிந்தனையைச் செழுமையாக்கி, நாவினைக் கூராக்கி, எழுதுகோலையும் வைரவாளாக்கி நற்பணியாற்றிட வாழ்த்துகிறேன்.

வாங்கிப் படித்துப் பயன் பெற்றிட தமிழ் மக்களை வேண்டுகிறேன்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



கொள்கைகள்
இறந்ததை
அறியாக்கொடிகள்
தலைவர்கள்
இறந்ததும்

தாழப்பறந்தன



தோண்டிய
குழியில்
கொள்கைகள்
புதைத்தால்

காவலாய்
தலைவரே
சிலையாய்
நிற்பார்



விபச்சாரம்
ஒழிவதற்கு
சர்வகட்சிக்
கூட்டம்

விளாசி
முடிந்த பின்னே
அம்முக்குட்டி
வீட்டில்



தலைவர்களுக்காய்
தீக்குளித்தால்
உதவிப் பணம்

விஷச்சாராயத்தால்
செத்தாலும்
உதவிப் பணம்

உடனே
உண்டு



உதிரிக் கட்சிகள்

தேர்தல்

சிக்னல்

பிச்சைக்காரர்கள்



வீட்டுக்கு
வழி
சொல்ல
ஒரு
சிலை
இல்லாமப்
போச்சே
மாப்ளே

சந்தியிலே

சிலையானார்

தலைவர்

......

இடது

பின்னங்கால்

தூக்கி

என்னமா

நிக்குது

அந்தச்

சொறிநாய்

அரவாணிகள்
தேர்தலில்
போட்டி
புதுசா இருக்கே
ஜெயிச்ச
பொறகுதானே
மாறிப்
போவாங்க

ஓசாமா பின்லேடனை
ஒழித்துக் கட்டுங்கள்

காஷ்மீர்
பிரச்சினையைக்
காப்பாற்றி
வையுங்கள்

கூட்டணி

ஊரொதுக்கும்
மண்டபத்தில்
பிச்சைக்காரப்
புணர்வுகள்



நெல்லின் விலையை
உயர்த்திக் கொடு
சம்பள உயர்வை
உடனே கொடு
போனஸ் பணத்தைக்
குறைக்காதே
அரிசி விலையை
உயர்த்தாதே



தலைவர்கள்
தாயர்
அறுக்க
முனைந்தால்
ஆயிரம்
கொங்கைகள்
அடுக்காய்
தேவை



தலைவர்கள்

பார்க்க

மறந்த

விளம்பரம்

காக்கையன்
பேரன்
அந்தோணி ராபர்ட்
படிப்பும்
பெற்றான்
மருத்துவம்
பெற்றான்
ஆசிரியராகி
அந்தஸ்தும்
பெற்றான்





இன்னொரு பேரன்
முகம்மது யூனுஸ்
உலகம்
போற்றும்
வணிகனானான்

காக்கையன்
கட்டிய
கோவணம்
கைகளோடு
மடத்தின்
வெளியே
பணிவாய்
நின்றான்



வெண்மணிச்
சூட்டைத்
தணிப்பதற்காகவா
தாமிரபரணியில்
முக்கி
எடுத்தீர்கள்



இடைவெளி
கொடுங்கள்
முதல்
வேண்டுகொள்
இரண்டே போதும்
இரண்டாம்
வேண்டுகோள்
ஒன்றே போதும்
உயர்ந்த
வேண்டுகோள்
ஒன்றும்
வேண்டாம்

சொல்லித்
தொலையுங்கள்
திருமணங்கள்
தடுக்கப் பாருங்கள்
தேர்தலை மட்டும்
அடிக்கடி
நடத்துங்கள்



எய்ட்ஸை தடுக்க
ஆணுறை தந்தீர்
ஊழல்
தடுக்க
லஞ்சம்
ஒழிக்க
உறைகள் தந்து
உடன்
அருள்
செய்க



பதறாதடே
பல்கலைக்கழகம் தான்
நா வரமாட்டேன்

டக்குனு புடிச்சு
டாக்டர் பட்டம்
குடுத்திடுவானுவ

கறுப்பர்கள்
குவிக்கும்
தங்கப்பதக்கம்

மார்ட்டின் லூதருக்கா
அமெரிக்காவிற்கா

முன்னும்
கவலை
பின்னும்
கவலை
நடுவில்
ஒருநாள்
தீபாவளி

ஆணுறை
அணிந்து
எய்ட்ஸை
தடுப்பீர்
அதையே
அணிந்து
குழந்தை
தடுப்பீர்

எய்ட்ஸும்
குழந்தையும்
ஒன்றாய்க்
கருதும்
இந்த
அரசுகள்
ஒழிந்தாலென்ன

விதவைக்கு
மறுவாழ்வு
கொடுக்கணும்னுதான்
வீராசாமிய
சுப்பய்யா
கொன்னான்



டிஸ்கவரி
சேனல்
பாருன்னா
சினிமா
பாக்கயே

இதுல
கொஞ்சம்
துணி
போட்டிருக்குல்லாவே

சொந்த
சுவருக்கு
வக்கிருக்காலே
வசூல்
போஸ்டர்
ஒட்டுதொனுவ



தம்பி
என்ன
எம்.ஏ.
வாங்கிருக்காகளா

நான்ல்லாவே
வாங்கினேன்
ரேட்டு
ஜாஸ்தி



தாயும் தந்தையும்
அலுவலகத்தில்
குழந்தை
பள்ளியில்
தாத்தா பாட்டி
முதியோர்
இல்லம்
வீட்டுப்
பூட்டுக்கு
விசனம்
அதிகம்

பனிக்குப்
பயந்தாங்க
ஆத்தாளும்
அப்பனும்

பணிக்குப்
போறான்டா
சின்னப் பய
சுப்பனும்

காட்டு
மரங்களை
நாங்கள்
வெட்டுவது

வீட்டுக்கொரு
மரம்
நீங்கள்
வளர்க்கவே



பம்பரமாய்ச்
சுற்றும்
மனித
வாழ்க்கைக்கு
முதல்
உணவளித்த
இடத்தைத்

தொடர்பாக்கியது
திரைப்படம்
ஒன்றே



முருகன்
மலையை
மும்தாஜ்
மலையாய்
ஆக்கிய
சினிமா
அடியோடு
வாழ்க



உழைப்பவர்
தமக்கு
கோவணம்
மொட்டை
உறுதி
என்றுணர்த்திய
முதல்
உழைப்பாளி



ரயிலை...
நிறுத்தும்
போகச்
சொல்லும்...

விடுதலை
பெற்ற
தண்டவாளத்
துண்டு



மாட்டுச் சாணத்தில்
வாசல் தெளி
யானை லத்தியில்
ஏறி மிதி
கழுதை விட்டையில்
புகையைப் பிடி
ஆட்டுப் புழுக்கையை
உரமாக்கு
மன மலங்களை
கவிதையாக்கு



கிளி
எடுத்த
அட்டையில்

பறக்கும்
கருடன்



காக்கை

உட்கார

ஆன்டெனா

விழுந்தது



ஆங்கிலம்
ஒரு
அற்புதம் செய்யும்

நீதித்துறையும்
பார் தான்
குடிக்கும்
இடமும்
பார் தான்

செத்துப்

போலாம்னு

விபரம்

கேட்டா

செலவில்லாம

முடியாதுங்கானே



காளைகளுக்கு

வேலைகள்

இல்லை

ஊசியில்

பசுக்கள்

அடங்கிப்

போகும்



மாநகரத்து
மண்பாடி
லாரிகள்
மண்ணுக்குத்தான்
பாடி
என்பதனை
எத்தனை
முறைகள்
செயல்
முறைப்படுத்தும்



முன்னால்
ஒன்று
நடுவில்
ஒன்று
பின்னால்
ஒன்று
தனியாய்த்
தொங்கும்
இரண்டு
சக்கர
வாகனக்
குழந்தைகள்

பின்னால்
தொங்குவது
இலவச
இணைப்போ

உலகம்
காணா
அதிசயம்
பாரீர்

ஊர் மக்கள்
வரிப் பணத்தில்
ஒட்டு மொத்தமாய்ச்
சம்பளம்
தந்து

வேலைக்காரனைத்
தேர்ந்தெடுத்து
கை கட்டி
அவரைக்
கை கூப்பி
வணங்குவோம்

காவியத்
தலைவா என்றே
போற்றுவோம்

என்றேனும்
ஓரிரு
வேலைகள்
பார்ப்பார்
இல்லையெனில்
துட்டுகள்
சேர்ப்பார்



வெடிகள்
செய்வது
அடிமைக்
குழந்தைகள்

வேடிக்கை
பார்ப்பது
பங்களா
வாசலில்



வெடிகள் இல்லை
வேடந்தாங்கலில்
மதுரையில்
நெல்லையில்
பறவைகள்
அமைதி
காப்பதற்காக

தொலைக்காட்சி
ஒழித்து
குழந்தைகள்
அமைதி
காப்பீரா



பெரிய மகன்
அமெரிக்காவில்

சின்ன மகன்
லண்டன் மாநகரில்

கடைசி மகளோ
ஆஸ்திரேலியாவில்

அன்னியர்
இந்தியாவை
ஆள
அனுமதியோம்

இந்திய நாடு
எங்களின் நாடு
ஜெய்ஹிந்



கைகளுக்குள்
இடை அடங்கும்
குறளைப்போல
மேலும்
கீழும்
ஆய்ந்து
பார்த்தால்...

பொருளைப்போலே

உன்னை
யாரும்
குண்டு
என்றால்
கவலை
கொள்ளாதே...

மதுரைக்காரர்கள்

குன்றைக்கூட
குண்டு
எனவே
அழைப்பர்!



பேருந்தில்

செய்தித்தாள்

....

அந்தப்பெண்...

அதிகம் குடித்தவர்
அதிகம் தூங்கியவர்
அதிகம் நடந்தவர்
அதிகம் ஓடியவர்

எல்லார்
பெயரும்
கின்னஸில்
இருந்தும்

அதிகம்
பட்டினி
கிடந்த
இவர்களின்
பெயர்
மட்டும்

இடம்
பெறாததெப்படி



விடுதியில்
விபசாரம்
கைதான
பெண்களின்
கலர்ப்படம்
பெயரோடு

விடுதியின்
பெயரோ
காணவில்லை

காவல் உதவி

மாதக்
கடைசி
வழக்குகள்
கணக்காய்

கள்ளச்
சாராயம்
விபச்சாரம்

போராட்டம் -1



முதல்
நாள்

உள்ளூர்
ரெளடிகள்
மட்டும்
கைது

போராட்டம் -2



கைது செய்
பார்ப்போம்
சுவரொட்டி

முன்னரே
விடுதலை
செய்
சுவரொட்டி

தயாராய்...

போராட்டம் -3

உள்ளிருப்பு
வேலை நிறுத்தம்
அறிவிப்பு

பெரும்பான்மை
நாட்கள்
அதுதானே



போராட்டம் -4



காலை தொடங்கி
மாலை வரை
அடையாள
உண்ணாவிரதம்

விவசாய
தொழிலாளி
கைத்து



சிரித்தான்...

போராட்டம் -5

மறியல்
செய்யும்
தொண்டர்கள்
வரிசை...



தலைவர்
பார்த்தார்

மாடியிலிருந்தே



குடி
குடியை
கெடுக்கும்

குடிமகன்கள்
பணமோ
அரசாங்கம்
காக்கும்



திரைப்பட
நடிகர்கள்
வீரம்
தெரிந்தது

வீரப்பன்
கடத்தல்
விளையாட்டின்
பின்னால்...



ஓடிப்போன
சாமியக்
காட்டிலும்
உள்ளூர்ச்
சாமி
ஒசத்திதான்வே



இலங்கையிலிருந்து
போலித் துறவிகள்

இராவணன்
என்றோ
துவக்கி
வைத்தது



எரிப்பது
என் மதம்
புதைப்பது
என் மதம்

பூகம்ப
முடிவில்
புதைந்தது
போக

எரிந்தது
எல்லாம்



பிள்ளையாரிடம்
ஓடிப்போனேன்
அவசரமாய்
அபயம்
கேட்க

சொனா
பானா
உபயத்திலேதான்
பிள்ளையார்
இருந்தார்
வெளிச்சத்தில்



விநாயகர்
ஊர்வலம்
முடிந்த
ஜோரில்

விநாயகர்
ஒயின்ஸில்
வியாபாரம்
கனஜோர்



காட்டுயானைகள்
நாட்டுள் வந்தன.
திருநீற்றோடு
சிவன் கோவிலில்;
திருமண்ணோடு
பெருமாள் கோவிலில்;
சிலுவையோடு
தேவாலயத்தில்;
பிறைநெற்றியோடு
பள்ளிவாசலில்.



வேள்விப்

பொருளில்

பிறந்த

ராமன்

தேர்தல்

தோறும்

பிறப்பது

எப்படி?

அழுகையிலும்
அவ
அழகு
யம்மாடி
ராமசாமி
பொணத்த
இன்னும்
தூக்கலே

கூடு
விட்டுக்
கூடு பாய
நாம
என்ன
சாமியாராவே



வாஃபர்
அய்யப்பன்
வழிபாட்டுறவை
ராமர்
பாபருக்கும்
நீட்டித்
தொலையுங்கள்



இரவு

கரவு

மறைவு

உறவு

துறவு



கடவுள் மிகவும்
நல்லவர்
ஆமாம்
நல்லவர்
நல்லவர்
நல்லவர்
உடலின்
மீது
எங்கேயேனும்
உபயம்
என்று
பொறித்தாரா

கொமரத்தாடிட்ட
குறி கேக்கப்போனா
குப்புற
விழுந்து
செத்துப்
போனான்

உள்ளூர்ச்
சாராய
வியாபாரிய
ஒடனே
புடிச்சிட்டுப்
போனது
போலீஸ்



பத்திரப்படுத்து

புத்தரின்
பல்லை
காந்தியின்
கண்ணாடி
கைத்தடி
கடிகாரம்
படுக்கை



இயேசு வருகின்றார்
ஆயத்தப்படு

சிலுவையைக்
கழுவு
ஆணிகள்
தயார் செய்

முள்ளில்
கிரீடம்
முக்கியம்

சிலுவையில்
இயேசு
இரத்தம்
வழிய

போப்பாண்டவரோ
புல்லட்
புரூஃபில்





பாவிகளை

இரட்சிப்பது

இயேசு

கிறிஸ்து

மட்டும்தானா

அய்யப்ப

சாமியுந்தான்

அர்த்தநாரி
ஆணும் இல்லை
பெண்ணும்
இல்லை
அரவாணி

ஆணும்
பெண்ணும்
பாதி பாதியா



தூணிலுள்ள
சிலையெல்லாம்
சாமியாகி

துட்டை
அள்ளித்
தருது பார்
பட்டருக்கு

முருகன்
மயில்
தேசியப்
பறவை



அய்யப்பன்
புலி
தேசிய
மிருகம்

ராமன்
மட்டுமே
தேசியக்
கடவுள்



சோதனைக்
குழாய்க்
குழந்தைகட்குத்
தசரதன்
நடத்திய
ஆரம்ப
விழா

பாயாசத்தில்
தொடங்கியது

தசரதன்
தேருக்கு

விரல்
அச்சாணியாக்கி
அயோத்தி
காத்த
கைகேயி





வரம்
மறுத்த
உண்மைக்
காதலி

மகன்
வளர்த்த
அன்பாம்
அன்னை

இரவுகள்
தோறும்
அணைத்துக்
கிடந்தவள்

ராமனுக்கு
அரசு

மறைத்த
மமதை



ஆசை
நாயகியோ
என்ற
அவதி

தோழி
தூண்ட
வரம்
நினைத்து

கேட்டதால்
மட்டும்
கீழ்மகள்
என்றால்



தசரத
யோக்யதை
தாங்க
முடியுமா

கண்ணப்பன்
சிவனுக்கு
படைத்த
மான் கறி





சல்மான்கானை
உள்ளே
தள்ளியது

பொன்மான்
தொடர்ந்த
ராமன்
இழந்தான்
பெண்மான்
சீதை



வலங்கை
மானோடு
சிவனார்
மட்டும்

மாங்கு
மாங்கென்று
ஆடுவதெப்படி

மேனகா
காந்திக்கே
மெத்த
வெளிச்சம்





தமிழர்
கடவுள்
முருகன்
கும்பிட
நீண்ட
வரிசை
ஜனவரி
1



தமிழ்த்

தாய்க்கொரு

ஆபத்தென்றால்

“வீ வில்

பைட் இட்”



எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்

இன உணர்வு
எங்கும ஓங்குக

பேண்ட் சர்ட்டில்
பிளிறல்கள்
அதிகம்



ஆங்கிலம்
பேசும்
தமிழய்யாக்கள்...

அசைவம்
சாப்பிடும்
தாய்மை...

தமிழைக்
காக்கும்
அறிஞர்
விருந்தில்

சென்னா
பட்டுரா
பாலக்
பன்னீர்





தங்கு தடையின்றி
தமிழே வாழ்க
தமிழினம்
எதிலும்
தலைமை
தாங்குக

தலைவலி
என்றால்
அனாஸின்
போடுக

உலகத்
தமிழர்காள்
ஒன்று படுங்கள்
உள்ளூர்த்
தமிழர்காள்
சாதி
பேணுங்கள்



நல்லவர்
தவிர்த்து
தீயவர்
எரிக்க



வா
மீத
முலை
எறி



நதியும் பெண்
நாடும்பெண்
மொழியும் பெண்
வீடுகள் தோறும்
தாய்
மனைவி
சகோதரி
மகள்
எங்கும்
பெண்கள்

நாற்ற
விளம்பர
ஆடை
அவிழ்ப்பில்
நகரில்
உயர்ந்த
இடங்கள் தோறும்
விடிய விடிய
வெளிச்ச
அரங்கில்



பெண்கள்
பெண்கள்
பெண்கள்
ஆதி
பராசக்தியை
அடிபணிந்து
நிற்போம்

கல்யாணம்
வேண்டாம்
என்றால்
பேரிளம்
பெண்ணாக்கிய
பிள்ளையார்
ஆகவே
வழியில்லை
என்றால்
ஆக்க மாட்டாரோ



அகவல்
வெண்பா
பாடத்
தெரியுமா



ஒரு கிளி
மைனாக்குஞ்சு
மரங்கொத்தியேனும்

நெடுஞ்சாலை
மரத்தின்
ஏக்கம்

கல்யாணத்துக்கு
முன்னே
ஒண்ணு ரெண்டு
தப்பு பண்ணியிருக்கேன்
நீ...

கல்யாணம்
மட்டுந்தான்

பெண்களின்
விடுதலை
பேசிடும்
சிலபேர்
பெண்களுக்காகவே
பேசி
நிற்கின்றார்



உறவுகளுக்குள்
உதவி
நிச்சயம்
சீதையின்
புருவச்சங்கடம்
கண்டு
ஸ்ரீராமன்
கையில்
வில்
முறிந்தது

கையில்
சிலம்புமில்லை
கண்களிலே
தீயுமில்லை
கண்ணகியின்
சோதரிகள்

காவலர்கள்
மத்தியிலே
காவலர்கள்
மத்தியிலே
ஓங் கற்பு
எங்கே
பொட்டப்புள்ள



ஏற்றுமதிக்கு
ஆடைகள்
செய்ய
துச்சாதனத்
தொழிற்சாலைகள்

வறுமைச்சூதில்
பஞ்சப்
பெண்கள்
பாஞ்சாலியாக





பாலை
ஊட்டிய
பாட்டில்கள்
உடைக்க
பாவையர்
உண்டு
நாடு
முழுக்க

கவர்ச்சி வேண்டும்
காதல் வேண்டும்
கட்டிப் பிடித்து
ஆடவும் வேண்டும்
மைதுன உணர்வில்
மகிழ்ந்து விட்டு
நடிகையின்
கற்பில்
விமர்சனம்
வேறு



காலம்
தெரியா
துறவியை
விடவும்
கல்லாய்
வாழ்தல்
சுகம்தான்
பெண்ணே



காதல் செய்யுங்கள்
காதல் செய்யுங்கள்
கல்யாணம்
வரையிலும்
காதல் செய்யுங்கள்





காதல் வேறு
காமம் வேறு
கண்மணி
கொஞ்சம்
கட்டிப்
பிடியேன்

காதலிக்கானாம்வே
கல்யாணம்
வேண்டாங்கான்

நாமள்ளாம்
காதலிக்கலயோ



உன்னைத்
தென்றல் என்றது
புகழ்ச்சியல்ல
நீயாகத்தான்
தழுவினாய்

உன்னை
மலர்கள்
என்றதும் கூட
புகழ்ச்சியல்ல
நீயாகத்தான்
மலர்ந்தாய்

உன்னைக்
கவிதை
என்றது கூட
புகழ்ச்சியல்ல
நீயாகத்தான்
தோன்றினாய்

உன்னைத்
தேடவிட்ட
காரணத்தால்
தேன் என்கின்றேன்

உன்னைத்
தீண்ட முடியாத
காரணத்தால்
தீ என்கின்றேன்

கண்கள் மீன்கள்
வாய் பவளம்
பற்கள் முத்து
கழுத்து
மார்பு
சங்கு வர்க்கம்
நீ கடல்

அதனால்தான்
மூழ்கிவிட்டேன்
நான்



நாவற் பழம்
கோவைப் பழம்
மாம்பழம்
அத்திப்பழம்
என்று
ஒட்டு மரமா
நீ

கடலில் விழுந்து
சாகப்போனேன்
கண்கள் நினைந்து
திரும்பி வந்தேன்
குன்றில் ஏறிச்
சாக நினைத்தேன்
கோல எழில்
நினைந்து
திரும்பி வந்தேன்

தூக்குக் கயிற்றில்
சாக நினைத்தால்
கூந்தல்
வந்து
தடுத்து
நிற்கும்

சாவதற்கும்
அனுமதிக்க
மாட்டாயா?

என்
எடை
கூடியிருப்பதாகச்
சொல்கின்றார்கள்
நீ
இருப்பதனை
அறியாமல்
உன்
எடையும்தான்

தனித்தனியாக
எடைபார்ப்பது
யாரால்
முடியும்



இரண்டு கண்களால்
ஒன்றைத்தான்
பார்க்க முடியும்
இரண்டு காதுகளால்
ஒரே ஒரு குரல்தான்
கேட்க முடியும்
இரண்டு இதழ்களால்
ஒரு சொல்தான்
சொல்ல முடியும்

இரண்டு செல்லங்களும்
ஒரு மார்பைத்தான்
சேர முடியும்
இரண்டு கைகளும்
ஒருவனைத்தான்
தழுவ முடியும்
இரண்டு கால்களுடன்
ஒரே திசையில் வா
இதோ இருக்கிறேன்
உன்
ஒருவன்



உன்
அம்மாவின் ஜாடை
என்கிறார்கள்
சிலபேர்
அப்பாவின் ஜாடை
என்கிறார்கள்
சிலபேர்
பாட்டியின் ஜாடை
என்று
பட்டிமன்றமே
நடக்கிறது

நானோ
உன்
கண்
ஜாடைக்காக
மட்டும்
காத்துக்
கிடக்கிறேன்

அன்பு
பண்பு
தெம்பு
நம்பு
என்றால்
வம்பு
என்று
அடுத்த வார்த்தை
சேர்ப்பது
நியாயமா

இரண்டும் ஒன்று!

முன் அட்டை
பின் அட்டை
அழகும்
முகவுரைத் தெளிவும்...
தீர்க்கமான பார்வையும்...
கனமான
உள்ளடக்கமும்...
ஆழமான பொருளும்...



விரிய விரிய
விளங்கும்
விளக்கவுரையாக...

நீ ஒரு புத்தகம்
கண்ணே...!

நீ
ரசிகனைத் தேடி
நின்றாய்
நான்
கவிதையைத் தேடி
நின்றேன்

தேடுங்கள்
கண்டடைவீர்கள்
என்ற
விவிலிய வரிகளை
உண்மையாக்கினோம்



அதற்காகவா
உன்
நினைவுச்
சிலுவையில்
பார்வை
ஆணிகளால்
அடித்து
என்னைப்
பத்திரப்
படுத்தினாய்
முள்கிரீடமாக
உன்
முத்தச்
சிதறல்கள்
என்
மூளைக்குள்ளேயே



பிறை நெற்றி
கண்டால்
பெண்களைப்
பழிக்காதே
என்ற
நபிபெருமான்
நினைவுவர
என்னைப் பழித்துக்
கொண்டேன்





கல்லைக்கட்டி
கண்ணீர்த்
தெப்பத்தில்
வீசினாலும்
உன்
நினைவின்
கனத்தினால்
மேலேயே
மிதக்கின்றேன்



சின்ன வயது
அம்மணப்
புகைப்படங்கள்
என்னிடம்
சிக்கிவிடக்
கூடாது என்று
காபந்து
பண்ணியதில்
என்ன
பயன் விளைந்தது
பைத்தியம்

சென்னை

நிலவொளி
தடுக்கும்
நியான்சைன்
விளக்குகள்
மழை நீர்
தடுக்கும்
கான்கிரீட்
பூமி
மனங்கள்
தடுக்கும்
ஆசை அவதி

விடியுமுன்
ஓட
வேலை
தூரங்கள்
உறவுகளுக்குள்
ஷிப்ட்
சிஸ்டம்
சேரிகள்
காக்கும்
செந்தமிழ்த்
தலைவர்கள்



மகளிர்
பலம்
காட்ட
குடிசைப்
பெண்கள்
கூவம்
மணக்க
வாழும்
குலமானத்
தலைவர்கள்
எருமைகளாக
நடுத்தெரு
பசுக்கள்

நடைபாதைக்
கோயில்கள்
வணிகர்களோடு
பெண்கள்
வணிகத்தில்
பெரிய
மனிதர்கள்
சாராய
வணிகரின்
சாம்ராஜ்ஜியப்
போலிஸ்

நட்சத்திர
விபச்சார
விடுதிகள்

இருட்டில்
சாப்பிடும்
குருட்டு
மனிதர்கள்
சாதிகள்
கவனிப்பில்
தேசியச்

சிலைகள்
எல்லாக்
கட்சியிலும்
ஏமாளித்
தொண்டர்கள்
தலைநகரத்தில்
தலைவர்கள்
அனைவரும்

தலைகளுக்குள்ளோ
கவலைகள்
இல்லை



பாய்ஸ்



பாயும் புலி
பறக்கும்
விமானம்
சுடும்
துப்பாக்கி
கணினியோடு
கடும்
விளையாட்டு

மம்மி
டாடி
டாடா
பை பை
மழலைகளுக்கு

தாயின்
மடியில்
முட்டும்
கன்று
துள்ளி
ஓடும்
ஆட்டுக்குட்டி
அரசமரத்து
அழகிய
கிளிகள்

ஆலம்
விழுது
ஓடும்
ஆறு
அம்மணமாய்
அதில்
ஆடும் ஆட்டம்

சோலைக்
குயில்கள்
சொந்தக்
கிழங்கள்

அரை
நிர்வாண
அன்பு
உறவுகள்
காட்டியதுண்டோ

எதுவுமற்ற
இயந்திர
வாழ்க்கை
போதைக்
குழியில்
புரட்டும்
அவனை

திருநெல்வேலி

இசை வடிவான
இறைவன்
மூங்கிலுக்குள்ளே
புல்லாங்குழல்
பிறந்தது
அதனால்

திருமால் கூட்ட
ராமக் கோனார்
அரண்மனைப் பாலை
அடிக்கடி
கொட்டி
மன்னர்
ஆணை
கோனார் வெட்ட
கொப்பளித்த குருதி
கங்கைக் குருதியா
சிவனின் குருதியா



பூஜைப் பட்டர்
வயிற்றுப் பாட்டு
நெல்லை
மழையில்
காத்தது
தமக்கு
நைவேத்தியம்
என்பதனாலுமோ

காந்திமதி
அம்மை தவசு
கம்பா நதியில்

முறுக்கிய
சிவனார்
வழியில்
மாலவன் வணங்கி
தங்கையும் வணங்கி
காட்சி மண்டபம்
கலகலப்பு

அதிகாலை
அம்மை
ஐப்பசி மாத
அடைமழையில்
பொருநையில்
குளித்து
ஈரச்சீலையில்
ஆலயம் விரைவாள்

அரிசி கிட்டங்கியான
ஆயிரங்கால் மண்டபம்
ஆத்திக அதிகாரி
ஆணையில் பிழைக்க
அப்பன் அம்மைக்கு
பிள்ளைகள் நடத்தும்
திருக்கல்யாணம்



மூத்த பிள்ளை
சந்தி விநாயகர்
இளைய பிள்ளையோ
குறுக்குத்துறையில்

அரசியல் கூட்டம்
அனைத்தும் கேட்டும்
அசையாதிருப்பார்
சந்தி விநாயகர்
போத்தி ஓட்டல்
வெண்ணெய்
தோசைக்கும்தான்



பொருநைக்
குளியல்
தினம்
இருந்தாலும்
முங்கும்
சுகத்து
மக்கள் கண்டு
வருடம்
இருமுறை
பலநாள்
முருகன்

முங்கிக்
கிடப்பான்
வள்ளி
தெய்வானை
துணையோடு
குறுக்குத்துறையில்



ஆனித்தேரின்
ஆட்ட அழகில்
அம்மை அப்பனின்
ஆட்டம்
தெரியும்



தேர்த்தட்டு
குறைஞ்சிருக்கு
எண்ணாமலே
சொல்லச் சிலபேர்
பக்திமன்றங்கள்
காவல்துறை
ஒத்துழைப்பாலே
ஒருநாளில்
நிலையம்
உறுதியாயிற்று

தேரிழுத்த கையொடு
பெரியார்
கூட்டமும்
கேட்கும்
பழக்கம்

வாரியாருக்கும்
வாசக மக்கள்

நெல்லையப்பர்
கண்பார்வையில்
இருட்டு லாலா
அல்வாக் கடை
நெல்லையப்பர் கூட
அம்பாளுக்கு
ரகசியமாக
வாங்கிக்
கொடுப்பதாக
வாலிபக்கிண்டல்

கருமாரித் தீர்த்தம்
பொற்றாமரைக் குளம்
வெளித்தெப்பம்
தாமரைக்குளம்
ஒண்ணுக்கொண்ணுதொடர்பாய்
பழைய அமைப்பு
பாதாளச் சாக்கடையாலே
பாழாய்ப் போச்சு

கோயில் வருமானம்
கூட்ட
தாமரைக்குளம்
கட்டிடமாகுது



பொற்றாமரைக்
குள
நீராழி மண்டபம்
பொதுக்குன்னு
ஒருநாள்
உள்ளே
முங்கிடுத்து
முங்கின விஷயம்
தெரியாமலே
நாவுக்கரசர்
தெப்ப உற்சவம்



வரித்தகறாறில்
காய்கறிச் சந்தை
நயினார் குளம்
கரைக்குப் போக
ஒதுங்கறவங்க
சங்கடப்பட

குளத்துக்கு
ரொம்ப
உற்சாகம்



வெளிநாட்டுப்
பறவைகள்
நிறைய இப்போ
நெல்லுவயல்
ஒழிச்சிட்டு
கடைகள்
அம்மா
பிணத்தில்
பிள்ளைகள்
ஆட்டம்

மருதமர அணிவகுப்பு

ஆனைப்பாலம்

லெவல்கிராஸிங்

எசக்கியம்மன்

படித்துறை எசக்கியம்மன்

கொடைக்கோவில்

காவடி கட்ட

காவடி மண்டபம்

வாலிப விளையாட்டுக்கு

வட்டப்பாறை



கருப்பந்துறைக்குப்
போனாத்தான்
சாதிக்கொரு
சுடுகாடு
சந்திக்கலாம்
சாம்பல்
மொத்தம்
ஆத்தில கரையும்



சின்னப் புள்ளைகளுக்கு
சீர் தட்டினா
செவ்வாய், வெள்ளி
புட்டாரத்தி கோவில்
பூசாரி
தண்ணி எறிவார்



வாகையடி அம்மன்
காவலில்தான்
பெருந்தலைகள்
கூட்டம்

தெருத்தோறும்
உச்சி மாகாளி
பரீட்சை நேரத்தில்தான்
அம்மன் கொடை
கேப்பா
கரகாட்டப்
பொம்பளைக்குக்
கூட்டம் சேர
வில்லுப்பாட்டுக்காரர்
வல்லரக்கன் காளி
பூசாரி கிழடுகள்
துணையோடு



கார், பஸ் போக
மேம்பாலம்
கட்ட வண்டி, சைக்கிளுக்கு
கீழ்ப்பாலம்

உக்காந்த அண்ணா
நிக்கிற அண்ணா
எம்ஜிஆருக்கு
ரெண்டு சிலைகள்...
படிச்ச பள்ளியில்
பாரதி சிலை...



அரசியல் மேதை
அம்பேத்கார்
பெரியார் பேருந்து நிலைய
வாசலில்...
தேசீயச் சாலையில்
தேவர் திருமகன்...
பெருந்தலைவர்
காமராஜர்
ரயில்நிலைய
வாசலில்...
சந்தி விநாயகர்
பக்கத்திலேயே
காந்தி அடிகள்

ஆத்துக்குள்ளே
ஒரு முருகன்
பாலத்துக்குக் கீழே
சாலைக்குமரன்

கருப்பட்டி
முட்டை
கலந்து
கட்டின
வெள்ளம்
பல கண்ட
சுலோச்சன
முதலியார்
ஆத்துப்பாலம்



புதுமைப்பித்தன்
பாரதி
படித்த
மனோன்மணியம்
பிள்ளை
வேல பாத்த
மதிதா
கல்வி
நிலையம்

பக்கிள்
ஆயான்
ப.ரா.வோடு
நீலன் சிலை
சோமயாஜுலு..,





பாரதி
காளி
ருஷியாவிற்கு
போனது போல்
சுடலைமாடன் கோயில்
தெரு
தி.க.சி.
சோவியத் நாடு
போனார்

இட்லி
எண்ணெய்
எள்ளு
மிளகாய்பொடி
வத்தக்குழம்பு
சுட்ட அப்பளம்
இஞ்சி பச்சடி
சுக்குத் தண்ணி
நன்னாரி பால்



திங்கப்பொறந்தவன்
திருநவேலிக்காரன்
எழுத்து கவிதை
எல்லாத்தையுந்தான்

ஒத்தவேட்டி
சிட்டுத்துண்டு
நெத்தி நிறைய
திருநாறு
அண்ணாச்சி
பையந்தானே
சௌக்கியமா
இன்னும்
இருக்கு

ஆத்துக்குளியல்
ஆரெம்கேவி வேல

அம்மைக்காரி
கையில
அவியல்
சாப்பாடு

சுத்தியும்
புதுமை
சுழன்றடிச்சாலும்
பழமை
இன்னும்
பத்திரமா
இருக்கு

மம்மி டாடி

டாடா
பைபை
மடக்கிப்

போடுமா
நெல்லை மண்ணை

வயக்காடெல்லாம்
கட்டிடமாகுது
வயலுக
கொஞ்சமாவது
வச்சிருந்தாத்தான்
வருங்கால
சந்ததிக்கு
வச்சுக் காட்டலாம்



காந்திமதி
நெல்லையப்பர்
காப்பாத்திக்
கொடுக்கணும்

சிவ புராணம்

வைகை வருத்தம்
பிட்டுக்கு
மண் சுமக்கப்
பெருமானுக்கு
ஆசை

வெள்ளம்
இல்லா
வைகைக்கு
வருத்தம்

வரதட்சனை

அவிர்ப்பாகத்திற்காய்த்

தாட்சாயணி

குளித்த

தீ

இன்னும்

எரிகின்றது



காலன்

மார்க்கண்டேய

அனுபவம்

அரசு

மருத்துவ

மனைகளில்

காலன்

வாசம்





நறுமணம்

மன்மதனை

எரித்த

ஏலாமை

நக்கீரன்

எரிப்பில்

தெளிந்தது

பட்டபாடு

சாம்பலானவன்
படுத்தும்
பாடே
தாங்க
முடியவில்லை
எரிக்கும்
முன்னர்
சிவனின்
பாடு





வணிகம்

வனக்காவலர்

தொடர்பில்லாததால்

விறகு

விற்க

சிவனால்

ஏலாது



கங்கை

மழைநீர்

சேகரிப்பில்

சிவனுக்கே

முதலிடம்

சுடலைச் சிவனார்
தந்த
கங்கையில்
பிணங்கள்
மிதப்பது
நியாயம்தானே



ஆடும் காலோ
அம்மையின்
கால்.
ஊன்றி
நிற்பதோ
அப்பனின்
கால்.



ஆடவர்
தயவில்
பெண்மை
என்பதா
ஆடிட
இருவரும்
தேவை
என்பதா

தேர்தல்
விற்பனை
முடிந்த
பிறகே
நரிகள்
பரிகள்
எனத்தெரியும்



சிவனின்
விளையாட்டு
தொடர்கின்றது
வாங்கி
ஏமாந்ததோ
மக்கள்

அடிமை

காலை
மாற்றாக்
காரணம்
முயலகன் மீது
நம்பிக்யையின்மை



கிருஷ்ண லீலை

வாயில்
உலகம் காட்ட
கண்ணனுக்கு
ஆசைதான்
அமெரிக்கா
அனுமதிக்க
வேண்டுமாமே

கருட சேவை

காளிங்க

நர்த்தனம்

மேனகா காந்தியால்

தடைப்பட்டுப்

போகும்





சுவரொட்டி

தின்று

பழக்கப்பட்ட

ஆவினங்கள்

குழலுக்கும்

வருவதில்லை



பாக்கெட்

பால்

வெண்ணெய்

திருட

குளிர்ப்பெட்டி

திறக்க

வேண்டும்

இந்திரனுக்குக்
கோபமில்லை
வருணனுக்கு
உத்தரவில்லை
கோவர்த்தன
மலைக்கோ
அவசியமில்லை

கட்டிப்
பார்க்க
உரல்களில்லை.



தண்ணீர்
இல்லாக்
குளங்கள்
பசுமையற்ற
மரங்கள்
கோபிகையர்
குளிக்க
வருவதில்லை





இரண்டுக்கு

மேல்

இல்லை

என்பதால்

அவனுக்கும்

வழியில்லை

பன்நாட்டுப்

பூதகியின்

பெப்ஸி

கோக்

முலைகள்

உறிஞ்ச

கண்ணனுக்கே

அச்சம்





அசுரர்கள்
வதைப்பிற்கோ
மனித
உரிமை
ஆணையம்
தடை

அவதாரம்
எடுக்கலாம்
என்றால்
ஏற்கனவே
எடுத்து
விட்டார்கள்
மனிதர்கள்



வைகுந்தம்
ஒன்றுதான்
தற்போதைக்குப்
பத்திரம்.



கந்தபுராணம்



நெற்றிக்
கண்ணின்
பொறிகள்
பறந்தன

சரவணப்
பொய்கை
குழந்தைகள்
ஆயின

கண்ணின்
பொறிகள்
பிள்ளைகளாயின
எரித்த
கண்ணில்
காமன்
புகுந்தது



கங்கையும்
நெற்றியில்
கலந்திருக்கலாம்

உண்ணாமுலையாள்
பேரழகு
காக்க
கார்த்திகைப்
பெண்கள்
மார்பகம்
தந்தனர்



முலை
தராத
தாயின்
வேல்தான்
மலை
பிளக்க
கந்தனுக்குதவி

தந்தை
ஆட்சியில்
மகன்
தலையீடு
அந்த வேளையில்
ஆரம்பமானது



சிறுவன்
என்று
சிந்தித்த
பிரம்மனை
சிறையில்
இட்டான்
சிவனின்
மகன்

ஆட்சியாளர்
மகன்
என்று
தெரிந்தும்

வணங்காதது
எவ்வகை
நியாயம்

சிறையில்
அடைக்க
குற்றப்
பத்திரிகை



பிரணவ
மந்திரப்
பொருள்
தெரியாமை

நான்கு
தலையிலும்
குட்டிய
வேகம்
வேதங்கள்
சிதைந்த
விபரீதம்
உணர்ந்தோம்
இன்று

எட்டுப்பத்தி
செய்தி
முதல்
பக்கத்தில்

தந்தை
ஆட்சியில்
மகனின்
ஆட்டம்



காரணம்
கேட்டான்
தந்தை

தகுதி
இல்லாத
பணி
நியமனம்



போலிச்
சான்றிதழில்
புகுந்தவன்
பிரம்மா தண்டித்த
உனக்கு
தரம்
இருக்கின்றதா
எங்கே
சொல் நீ
என்றார்
சிவனும்

கீழே நீ
மேலே நான்
கேட்கும்
முறையில்
நியாயம்
சொன்னான்

இளையவர்
அறிவை
முதியவர்
ஏற்றல்

ஏற்றம்
என்ற
பாடம்
கிடைத்தது

இந்திரன்
மகளை
கைப்பிடித்த
பின்னர்

வேட்டுவன்
கண்ணை
வாங்கிய
தந்தை
கண்வழி
உறவு
கந்தனை
மயக்க

மான்கறி
தின்ற
மறையவன்
மகன்
மான்மகள்
தேடினான்



வேடனாகி
மானைக்
கண்டான்
விருத்தனாகித்
தேனை
உண்டான்

காதல்
உணர்வால்
மரத்துப்போய்
மரமும்
ஆனான்

மிரட்டல்
திருமணம்
முருகன்
துவங்கியது

அண்ணன்
ஆனை
மானை
விரட்ட

திருமணம்
நடந்தது
தினை
மாவோடு

குறவர்
மகளை
திருமணம்
செய்து
குன்றம்
அனைத்தும்
சீதனம்
பெற்றான்



ஒற்றைப்
பெண்ணாய்
உள்ள
வீட்டை
இளைஞர்
தேட
வழியும்
செய்தான்

காமன்
எரித்த
நெற்றிப்
பிள்ளை
கண்டான்
இரண்டு
மனைவியர்



எரித்த
நக்கீரன்
இணையற்ற
தமிழில்

ஆற்றுப்
படையை
அன்புடன்
ஏற்றான்

எதிர்த்த
சூரன்
அழிக்கவில்லை
விடியல்
உணர்த்தும்
சேவல்
ஆக்கினான்
மழை
வரவேற்கும்
மயிலாய்
ஆக்கினான்



அழித்தல்
கடவுளின்
அன்புப்
பிள்ளை

அரவணைத்தல்
ஆரம்பம்
செய்தான்

வா
மீதமுலை
எறி

தோண்டிய குழியில்
கொள்கைகள் புதைந்தால்
காவலாய் தலைவரே...
சிலையாய் நிற்பார்



ஓடிப்போன
சாமியக்
காட்டிலும்
உள்ளூர் சாமி
ஒசத்திதான்வே

வாஃபர் அய்யப்பன்
வழிபாட்டுறவை
ராமர் பாபருக்கும்
நீட்டித் தொலையுங்கள்